**செ. கு. எண்: 206** **நாள் :08.11.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம்
அவர்களின் அறிக்கை – 8.11.2014

"சகாயம் ஐ.ஏ.எஸ். விசாரணையில் தாமதம்!" என்று தலைப்பிட்டு திரு கருணாநிதி விஷமத்தனமாக வெளியிட்ட அறிக்கைக்கு, 2.11.2014 அன்று நான் வெளியிட்ட பதில் அறிக்கையின் வாயிலாக திரு. கருணாநிதி தலைமையிலான மைனாரிட்டி திமுக அரசு மதுரையில் கிரானைட் கொள்ளைக்கு எவ்வாறு துணை போனது என்றும், அதனை மூடி மறைக்க என்னென்ன தகிடு தத்தங்களை திரு. கருணாநிதி செய்தார் என்றும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது கிரானைட் ஊழல் முறைகேட்டை எதிர்த்து அறிக்கை வெளியிட்டதைப் பற்றியும், மைனாரிட்டி திமுக அரசால் மூடிமறைக்கப்பட்ட கிரானைட் முறைகேட்டினை வெளிக் கொணர்ந்தது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு தான் என்பதையும், கிரானைட் முறைகேடுகளை வெளிக்கொண்டு வந்தது மட்டுமல்லாமல் அது தொடர்பாக எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக தெளிவுபடுத்தியிருந்தேன்.

இந்த அறிக்கையின் மூலம் தங்களது குட்டு வெளிப்பட்டுவிட்டதே என்ற ஆதங்கத்தை "கிரானைட் முறைகேடு – சகாயம் தலைமையில் விசாரணை நடத்த உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் உத்தரவிட்ட பிறகும் இவ்வளவு கால தாமதம் ஏன்?" என்று தலைப்பிட்டு மக்களை ஏமாற்றி விடலாம் என்ற நப்பாசையில் திரு. கருணாநிதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். "பூனை கண்ணை மூடி, பூலோகமே இருண்டு விட்டதாக கூறுவது போல்" என்ற பழமொழியைத் தான், இந்த அறிக்கை நினைவுபடுத்துகிறது.

கிரானைட் முறைகேடு தொடர்பாக 2.11.2014 அன்று நான் வெளியிட்ட அறிக்கையின் உண்மை நிலையை சரியாக புரிந்து கொண்டு, "கிரானைட் முறைகேட்டை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது ஜெயலலிதா அரசு தான்" என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்ட பத்திரிகைகள் மீது திரு.கருணாநிதி பாய்ந்து, முறைகேடு நடக்கும்போது தானே வெளிச்சத்துக்கு வரமுடியும் என்று குதர்க்கமாக பதில் அளித்துள்ளார். திரு.கருணாநிதி ஏற்கெனவே சுட்டிக்காட்டிய 28.10.2014 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மேற்கோள் காட்டி கிரானைட் முறைகேட்டிற்கு எதிரான நடவடிக்கையை எடுக்கத் தவறிய முந்தைய மைனாரிட்டி திமுக அரசுக்குத் தான் சென்னை உயர்நீதிமன்றம் குட்டு வைத்துள்ளதே தவிர, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு அல்ல என்பதை நான் தெளிவுபடுத்தியிருந்தேன். "It is not as if we were unaware of the contents of the counter affidavit, but the fact remains that the scam remained undetected till report was submitted by Mr. U. Sagayam, I.A.S. If the Government acted in an efficient manner, such a situation ought not to have come to pass. This is not some minor issue to remain undetected. … It is only when these irregularities were brought to notice by an officer with the State Government, that action was sought to be taken. … It (Executive) failed to perform qua the irregularities that arose right under its nose over a long period of time." என்று கருத்து தெரிவித்துள்ளதை சரியாக புரிந்து கொண்டால் முந்தைய மைனாரிட்டி திமுக

This document was created using Smart PDF Creator
To remove this message purchase the product at www.SmartPDFCreator.com

அரசின் மீது தான் சென்னை உயர்நீதிமன்றம் குறை கண்டுள்ளதே தவிர புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசின் மீதல்ல என்பது தெளிவாகும்.

சகாயம் விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்த போதே தற்போது வெளியிட்டுள்ள உத்தரவை அதிமுக அரசு வெளியிட்டிருக்க வேண்டாமா என்று மீண்டும் அதே கேள்வியை திரு.கருணாநிதி கேட்டுள்ளார். ஏற்கனவே நான் தெரிவித்திருந்ததை மீண்டும் திரு.கருணாநிதிக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கிரானைட் முறைகேட்டை வெளியே கொண்டு வருவதற்கான அனைத்து விசாரணைகளும் முடிந்து முறைகேட்டில் ஈடுபட்டவர்களெல்லாம் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில், புதியதாக ஒருவர் விசாரணை செய்தால், ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகளில் கால தாமதம் ஏற்படும் என்பதன் அடிப்படையில் தான் திரு.சகாயம் அவர்களின் நியமனம் அவசியமில்லை என்று தமிழ்நாடு அரசு நீதிமன்றங்களில் முறையிட்டது. இதை எனது அறிக்கையில் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளேன். அந்த அறிக்கையினை திரு.கருணாநிதி படிக்கவில்லையா? அல்லது படித்தும் புரியவில்லையா? அல்லது புரிந்தும் புரியாதது போல் நடிக்கிறாரா? என்பதை திரு.கருணாநிதி தான் விளக்கவேண்டும். எப்படியிருந்தாலும், இப்போதாவது அவர் இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

“கிரானைட் முறைகேடு குறித்து பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையா?” என்று கேள்வியை கேட்டுக் கொண்டு, பத்திரிகைச் செய்தி வந்த இரண்டே நாட்களில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுவிட்டது என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கைக்கு மாசு கற்பிப்பதாகவும், முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சி காலத்தில் எந்த நீதிமன்றமாவது விசாரணை நடத்தவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறதா? என்றெல்லாம் திரு.கருணாநிதி பிதற்றியிருக்கிறார். மேலும், ஒரே பத்திரிகையில் தான் கிரானைட் முறைகேடு பற்றி செய்தி வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இவை அனைத்தும் உண்மைக்கு மாறானாவை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில் கிரானைட் முறைகேடு தொடர்பாக 28.4.2009 அன்று ஒரு காலை நாளிதழில் கிரானைட் முறைகேடு தொடர்பான விரிவான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. திரு.S.முருகேசன் மற்றும் 52 பேர் 3.8.2009 அன்று முந்தைய மைனாரிட்டி திமுக அரசுக்கு புகார் மனு அளித்துள்ளார்கள். 27.6.2009 நாளிட்ட ஒரு ஆங்கில நாளிதழில் விரிவான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் கீழவளவு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.பி.வி.தர்மலிங்கம் 24.5.2010 அன்று இது தொடர்பான ஒரு புகார் மனுவை தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளார். 24.5.2010 அன்று ஒரு அரசியல் கட்சித் தலைவர் இது தொடர்பாக முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு புகார் மனு அனுப்பியுள்ளார். திரு.ரமேஷ்குமார் என்பவர் 2.6.2010 அன்று இது தொடர்பாக அரசுக்கு ஒரு புகார் மனு அனுப்பியிருந்தார். இந்த புகார் மனுக்கள் மற்றும் நாளேடுகளில் வந்த செய்திகள் தொடர்பாக கிரானைட் முறைகேட்டை வெளிக் கொணர முந்தைய மைனாரிட்டி திமுக அரசால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

This document was created using Smart PDF Creator
To remove this message purchase the product at www.SmartPDFCreator.com

திரு.முருகேசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் **2009** ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பல்வகை மனு மீது **4.2.2011** அன்று வழங்கப்பட்ட உத்தரவில், "No counter affidavit has been filed on behalf of the first respondent (Commissioner, Geology and Mining) till date. …. Coupled with the fact that the 5th respondent had also launched defamation suit against the petitioner .. claiming damages only on the basis of the impugned order passed by the District Collector shows that there is an attempt to silence the petitioner from pursuing his remedy….. It was unnecessary for him (District Collector, Madurai) to have come up with the contention that the petitioner's attempt was to bring complaints against the 5th respondent in order to forestall the suit pending before the District Court. It was purely a private civil dispute for which the 2nd respondent was in no way concerned….. In any event, the attitude of the District Collector in referring to the private civil dispute in his official counter affidavit do not inspire confidence.

"In the present case, the petitioner is an individual, who on being charged with the desire to bring large scale revenue evasion had made the complaint to appropriate authorities. The District Collector had treated the said complaint as if it was a private dispute between the petitioner and the 5th respondent. …. There was also no independent attempt made to find out with the available infrastructure to arrive at the actual quarrying done and the amount of money paid towards seigniorage fee … The concern expressed by the Commercial Tax Department that a large scale evasion of commercial tax was also not gone into…. When the Court is of the opinion that the 2nd respondent (Collector, Madurai) had not discharged his duty in unraveling the truth by gathering materials from all relevant departments by acting on his own and not treat the complaint made by the petitioner as part of an adversarial procedure, the only course open to this Court is not to accept the alleged conclusions reached by the 2nd respondent."

அதாவது "நாளது வரையில் முதலாவது எதிர்மனுதாரர் (புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர்) சார்பாக எதிர்பிரமாணப்பத்திரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை……. மனுதாரருக்கு எதிராக **5** ஆவது எதிர்மனுதாரர் அவதூறு வழக்கு தொடுத்துள்ளார் என்ற விவரத்தையும் சேர்த்து பார்க்கும்போது….. மாவட்ட ஆட்சியரால் பிறப்பிக்கப்பட்ட குறை கூறப்பட்ட ஆணையின் அடிப்படையில் மட்டுமே இழப்பீடு கோரப்பட்டிருப்பது மனுதாரர் தனக்குள்ள தீர்வு வழியை தொடர்வதை நிறுத்தும் முயற்சி என தெரிகிறது. மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை தடுப்பதற்கான மனுதாரரின் முயற்சியே **5** ஆவது எதிர்மனுதாரருக்கு எதிராக புகார் அளித்திருப்பது என மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்து வைத்துள்ள வாதம் தேவையற்றதாகும். இது முற்றிலும் தனிப்பட்ட உரிமையியல் வழக்காகும். இதில் **2** ஆவது எதிர்மனுதாரருக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை …… எப்படியாயினும், தனிப்பட்ட உரிமையியல் வழக்கை அலுவல்முறை எதிர் பிரமாணப்பத்திரத்தில் சேர்த்திருக்கும் மாவட்ட ஆட்சியரின் மனப்பாங்கு அவரிடம் நம்பகத்தன்மையை ஏற்படுத்தவில்லை.

இந்த வழக்கில், தனிப்பட்ட நபரான மனுதாரர் பெருமளவு வருவாய் ஏய்ப்பு நடந்துள்ளதை வெளிக்கொணரும் ஆவலுடன் உரிய அதிகார அமைப்புகளுக்கு புகார்

This document was created using Smart PDF Creator
To remove this message purchase the product at www.SmartPDFCreator.com

செய்துள்ளார். மாவட்ட ஆட்சியர், மேற்சொன்ன புகாரை மனுதாரருக்கும் 5 ஆவது எதிர் மனுதாரருக்குமிடையேயான தனிப்பட்ட வழக்கைப் போல பாவித்துள்ளார்…… உண்மையில் எவ்வளவு கனிமம் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் உரிமைக் கட்டணம் எவ்வளவு செலுத்தப்பட்டுள்ளது என்பதை இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதியுடன் கண்டறிய எந்தவிதமான சுதந்திரமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. பெருமளவில் வணிக வரி ஏய்க்கப்பட்டுள்ளது என்று வணிக வரித்துறையால் கவலை தெரிவிக்கப்பட்டது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. நீதிமன்றம் தன்னுடைய கருத்தில், 2 ஆவது எதிர்மனுதாரர் (மதுரை மாவட்ட ஆட்சியர்) தாமே முனைப்பாக செயற்பட்டு தொடர்புடைய துறைகள் அனைத்திடமிருந்தும் விவரங்களை சேகரித்து உண்மையை வெளிக்கொணர தன்னுடைய கடமையை செய்யவில்லை என்றும் மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகாரை எதிர்மறையான நடைமுறையின் ஒரு பகுதியாக பாவித்திருக்கக்கூடாது என்பதன் அடிப்படையிலும் 2 ஆவது எதிர்மனுதாரரால் எடுக்கப்பட்ட முடிவை ஏற்காமல் இருப்பதே இந்த நீதிமன்றத்திற்குரிய ஒரே வழியாகும்” என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதாவது, முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் கிரானைட் முறைகேடு தொடர்பாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படிப்பட்ட விசாரணையை மேற்கொண்டார் என்பதை சென்னை உயர்நீதிமன்றம் தோலுரித்துக் காட்டியுள்ளது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து அறிக்கை அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தான் அப்போதைய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சகாயம் அவர்கள் 19.5.2012 நாளிட்ட அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

திரு.கருணாநிதி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து இரண்டே நாட்களில் அறிக்கை பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். இரண்டே நாட்களில் மதுரை மாவட்டத்திலுள்ள 175 கிரானைட் குவாரிகளையும் ஆய்வு செய்ய இயலுமா? அவ்வாறு ஆய்வு செய்து முறைகேடே இல்லை என்று தெரிவித்தது முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைத்தது போல என்பது தான் என்பதை உயர்நீதிமன்றத்தின் தற்போதைய ஆணை தெள்ளத் தெளிவாக்கிவிட்டதே!

கிரானைட் முறைகேடு தொடர்பாக அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட விவரத்தை எனது அறிக்கையில் நான் விரிவாக தெரிவித்தும் அதைப் பற்றி கேள்வி கேட்டுள்ளார் திரு.கருணாநிதி. எனவே, சட்டப்பூர்வமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை மீண்டும் சுருக்கமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.-

i) மதுரை மாவட்டத்தில் 175 கிரானைட் குவாரிகளும் ஆய்வு செய்யப்பட்டு, 84 கிரானைட் குவாரிகளில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டது.

ii) 77 குவாரிகளின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டன; 6 குவாரிகள் நீதிமன்ற உத்தரவுகளின் கீழ் உள்ளன; ஒரு குவாரியின் உரிமம் ஏற்கனவே ரத்து செய்யப்பட்டு விட்டது.

This document was created using Smart PDF Creator. To remove this message purchase the product at www.SmartPDFCreator.com

iii) இந்த தற்காலிக ரத்து ஆணைகளுக்கெதிராக குவாரி உரிமையாளர்கள் 57 நீதிப் பேராணை மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தடையாணைகளைப் பெற்றனர். இந்த வழக்குகள் அனைத்தும் தொகுப்பு வழக்குகளாக மாற்றப்பட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ளன.

iv) 83 தனியார் கிரானைட் நிறுவனங்களால் முறைகேடாக வெட்டி எடுத்துச் செல்லப்பட்ட கற்களின் சந்தை மதிப்பான 13,748 கோடி ரூபாய் செலுத்துமாறு மதுரை மாவட்ட ஆட்சியரால் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் குறிப்பாணைகள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றின் மீது குவாரி உரிமையாளர்களால் தடையாணைகள் பெறப்பட்டு அதில் 57 வழக்குகளை உயர்நீதிமன்றம் 2.9.2014 அன்று தள்ளுபடி செய்தது. 5 வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன.

v) அரசு புறம்போக்கு நிலங்களில் வைக்கப்பட்டிருந்த 24,751 கிரானைட் கற்களை கையகப்படுத்த மாவட்ட ஆட்சியரால் பிரசுரிக்கப்பட்ட அறிவிக்கைகளை எதிர்த்து 6 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதன் மீதான விசாரணை 8.8.2014 அன்று முடிவுற்று 5.11.2014 அன்று ரிட் மனுக்கள் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து மதுரை மாவட்ட ஆட்சியரால் மேல்முறையீடு செய்யப்படும்.

vi) கிரானைட் முறைகேட்டில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக 90 முதல் தகவல் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை 24 முதல் தகவல் அறிக்கைகளுக்கு தடையாணை பிறப்பித்துள்ளது. இதனை நீக்கக் கோரும் மனு தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு சட்டப்படியான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்பதை திரு.கருணாநிதி இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும்.

திரு.கருணாநிதியின் பேரன் பங்குதாரராய் உள்ள ஒலிம்பஸ் கிரானைட்ஸ் நிறுவனத்தை ஆய்வு செய்த அப்போதைய மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.சகாயம், ஒலிம்பஸ் நிறுவனம் சட்டத்துக்கு விரோதமாக கிரானைட் எடுத்திருந்ததை உறுதி செய்ததாக தெரிவித்து இதன் மூலம் திரு.கருணாநிதியின் குடும்பத்தினர் கிரானைட் கொள்ளையில் ஈடுபட்டதை திரு.சகாயம் தெளிவுபடுத்தியிருந்ததை எனது முந்தைய அறிக்கையிலேயே சுட்டிக் காட்டியிருந்தேன். இதற்கு கருணாநிதியின் பதில் என்ன?

முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சி கிரானைட் கொள்ளையர்கள் மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும் கருணாநிதியின் பொய்மை அறிக்கைகளால் மறைத்திட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

This document was created using Smart PDF Creator
To remove this message purchase the product at www.SmartPDFCreator.com